தொகுப்பு இல. 23 இதழ். 3

கொழும்பு இறையியல் கல்லூரி

புரட்டாசி 2025

# INFORMATION



2025-ம் வருடத்தின் பட்டதாரிகள் குழு

# “உலகம் காத்திருக்கிறது, அறுவடை ஆயத்தமாக இருக்கிறது, கர்த்தர் உங்களோடுகூட இருக்கிறார்.”

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாக்களில், “பொறுப்பாணை அளித்தல்” எனப்படும் ஒரு சிறப்பு பாரம்பரியமானது கடைப்பிடிக்கப்படுகிறது. இது பட்டச்சான்றிதழ், இளங்கலை, முதுகலை உள்ளிட்ட பட்டங்கள் வழங்கப்பட்டதன் பின்பதாக இந்த சுருக்கமான பெருமித செயற்பாடானது இடம்பெறுகிறது. இதில் கல்லூரியின் செயற்குழு உறுப்பினரால் அல்லது ஒரு மூத்த கிறிஸ்தவ தலைவரினால் கிறிஸ்துவிற்கு ஊழியர்களாக பட்டதாரிகளின் உயரிய அழைப்பினை நினைவூட்டி, இப்புனிதமான நம்பிக்கையை பாதுகாக்கும்படியாக அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

”பொறுப்பாணை அளித்தல்” என்பது, புதிய ஏற்பாடில் ஆண்டவரின் வேலையாள் ஒருவருக்கு கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு கீழாகவுள்ள பொறுப்புகளை குறித்து இரு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட “பொறுப்பாணைகளினால்” ஊக்குவிக்கப்பட்டது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களின் குறிப்புகளும் பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதிய நிருபங்களில் காணப்படுகின்றன (1 தீமோத்தேயு 5:21; 2 தீமோத்தேயு 4:1)

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், பவுல் டயமார்டுரோமை *(diamarturomai)* என்ற தனித்துவமான வார்த்தையை பயன்படுத்துகிறார். இது “நான் உறுதியாய் கட்டளையிடுகிறேன் அல்லது வலியுறுத்துகிறேன்” என அதிகார வரையறையுள்ள அர்த்தத்தை கொண்டிருந்தது. இந்த இரு சந்தர்ப்பங்களிலும் “தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் முன்பாக…” என்ற ஒரே விதமான சொற்றொடரை இணைத்து கூறுவதன் மூலமாக அதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிபரின் சிந்தனையிலிருந்து



**ஐவோ பூபாலன், PhD**

அதிபர்

1தீமோத்தேயு 5:21-ல், பவுல் “பட்சபாதம் அல்லது பாகுபாடு இல்லாமல்” ஊழியத்தினை செய்யும்படி தீமோத்தேயுவிற்கு “பொறுப்பாணை அளிப்பதுடன்”, ஆண்டவருக்கு நேர்மையான ஊழியராக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார்.

2தீமோத்யே 4:1-5-ல், பவுல் “திருவசனத்தை பிரசங்கிக்கும்” மற்றும் “சுவிசேஷகனுடைய வேலையை செய்யும்படியும்” தீமோத்தேயுவிற்கு “பொறுப்பாணை அளிக்கிறார்”. இங்கு அவர் தீமோத்தேயு கர்த்தருக்கு விசுவாசமுள்ள ஊழியராக இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறார்.

ஒவ்வொரு பட்டதாரி மாணவரும் தமது பட்டமளிப்பு மற்றும் பொறுப்பாணைக்கு பின்பதாக வரும் வருடங்களில், நேர்மையும், விசுவாசமுள்ள கிறிஸ்தவ தலைவராக அறியப்பட வேண்டுமென்பதே எமது ஜெபமாகும்.

2025 ஆடி மாதம் இடம்பெற்ற 15-வது பட்டமளிப்பு விழாவில், கல்லூரி செயற்குழுவின் உப தலைவரான வண.ரொமேஷ் புளத்சிங்களவினால் “பொறுப்பாணை அளிக்கும்” நிகழ்வானது மேற்கொள்ளப்பட்டது. அதன் முழுமையான பதிப்பினை நமது இன்-போமேஷன் (தகவல் களஞ்சியம்) இதழில் வெளியிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

அன்புள்ள பட்டதாரிகள்,

இன்று உங்கள் கற்றல் நிறைவடையும் நாள் மட்டுமல்ல - இது உங்கள் பரிசுத்தப்பணியின் ஆரம்பமாகும். நீங்கள் வார்த்தையின் கீழ் அமர்ந்து, அதன் ஆழங்களை ஆராய்ந்து, அதன் சத்தியங்களுக்காக ஜெபித்து, அதன் தேவைகளுக்காக போராடினீர்கள். இப்போது, நீங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டு இருப்பதால் உங்களுக்கு பொறுப்பாணை ஒப்படைக்கப்படுகிறது. இது வெறுமனே ஒரு மாற்றம் அல்ல - இது ஒரு அனுப்புதல் ஆகும்.

கடவுளின் ஊழியராகவும், அவரது திராட்சைத்தோட்டத்தின் சக ஊழியராகவும், இன்று நான் உங்களுக்கு பொறுப்பாணை அளிக்கிறேன்:

### விசுவாசத்துடனும், தைரியத்துடனும் வார்த்தையை பிரசங்கியுங்கள்

சத்தங்களும், வஞ்சகங்களும் நிறைந்த உலகில், மாறாத சுவிசேஷத்தின் சத்தியத்தை அறிவிக்க நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" என்று கூறுயதைப்போல,

காலத்திற்கு ஏற்றவாறு செய்தியை நீர்த்துப்போக செய்யாதீர்கள். உங்கள் விசுவாசத்தினை பிரபலத்திற்காக வர்த்தகம் செய்யாதீர்கள். உறுதியாக தரித்து நில்லுங்கள். சத்தியத்தை பேசுங்கள்.

### சத்தியத்தை தேடும் உங்கள் நாட்டமானது இயேசுவின் மீதான பெரிய அன்பிற்கு வழிநடத்தட்டும்

வேதாகம படிப்பின் நோக்கம் வெறும் தகவல் அல்ல, அது ஒரு மாற்றம் ஆகும்.

உங்கள் அறிவை கூர்மைப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், இயேசுவுடனான உங்கள் நெருக்கத்தை ஆழப்படுத்தவும் வேதாகம வசனங்களை ஆராயுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் பாக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்." (பிலிப்பியர் 3:10) என அறிவித்தபடி,

நீங்கள் வார்த்தையில் செலவழிக்கும் ஒவ்வொரு கணமும் உங்களை அவருடைய இதயத்திற்கு நெருக்கமாக வழிநடத்தட்டும்.
உங்கள் கற்றலில் கிறிஸ்துவை தவறவிடுவது என்பது முழு நோக்கத்தையும் தவறவிடுவதற்கு சமமாகும்.

### நீங்கள் பிரசங்கிக்கிறதை பின்பற்றுங்கள்

உங்கள் கதாபாத்திரம் உங்கள் செய்தியை எதிரொலிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையானது அனைவராலும் வாசிக்கப்படும் ஒரு ஜீவனுள்ள நிருபமாக இருக்கட்டும். புனிதத்தன்மை, மனத்தாழ்மை மற்றும் அன்பை பொது இடங்களில் மட்டுமல்ல, இரகசிய இடத்திலும் பின்பற்றுங்கள்.

உங்கள் அழைப்பு கிறிஸ்துவுக்காக பேசுவது மட்டுமல்ல, அவரையே பிரதிபலிப்பதும் ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நன்முறையில் வாழும் வாழ்க்கையே சாட்சியான பிரசங்கமாகும்.

### திருச்சபைக்கு சேவை செய்து தொலைந்தவர்களை சென்றடையுங்கள்

நீங்கள் சௌகரியத்திற்காக அல்ல, ஆனால் பொறுப்பினை ஏற்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். திருச்சபையை கட்டியெழுப்புங்கள். மக்களை நேசியுங்கள். உடைந்தவர்களை தூக்கி விடுங்கள்.




வண.ரொமேஷ் புளத்சிங்கள (கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழுவின் உபதலைவர்) பட்டதாரிகளுக்கு பொறுப்பாணை அளிக்கிறார். வண.ரொமேஷ் புளத்சிங்களவின் இருபுறத்திலும், அப்பொறுப்பாணையை முறையே தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்த்த கல்விப்பீட உறுப்பினர்களான ஜுலியன் தேவதாசன் (இடது) மற்றும் மிஷேல் பீரிஸ் (வலது) ஆகியோர் காணப்படுகின்றனர்.

உலகம் முழுவதும் சென்று சீஷர்களை உருவாக்குவதற்கான மாபெரும் ஆணையை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். ஒரு பிரபலமாக அல்ல, மேய்ப்பராக இருங்கள்.

### தயவு செய்து கடினமான காலங்களை தாங்கி, பாதையில் நிலைத்திருங்கள்

ஊழியம் என்பது ஒரு மேடை அல்ல - அது ஒரு போர்க்களம். எதிர்ப்பு, சோர்வு மற்றும் சிலசமயங்களில் அமைதியான காலங்களும் இருக்கும். ஆனால் "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்." நெருப்பு வரும்போது அது உங்களை சூறையாடாமல் சுத்திகரிக்கட்டும். மனச்சோர்வு வரும்போது, சிலுவையின் பாதங்களை அணுகுங்கள்.

### கடவுளின் பிரசன்னத்தில் ஆழமாக வேரூன்றியிருங்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது பிரசன்னத்தில் நிலைத்திருங்கள். உங்கள் வெற்றி மூலோபாயத்தில் அல்ல, ஆனால் ஆண்டவருடனான நெருக்கமான உறவில்தான் உள்ளது. அபிஷேகம் ஒரு பட்டத்திலிருந்து அல்ல, நீங்கள் அவருடன் செலவிடும் நேரத்திலிருந்து பாய்கிறது. இரகசிய இடம் எப்போதும் உங்கள் ஆதாரமாகவும் வலிமையாகவும் இருக்கட்டும்.

பட்டதாரிகளே, நீங்கள் தயவுசெய்து எழுந்து நிற்பீர்களா?

### இந்த இறையியல் கல்லூரியின் கல்விப்பீட விரிவுரையாளர்களும் தலைமையுமான நாங்கள் இப்போது உங்களை வெளியே அனுப்புகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புறப்பட்டு செல்லுங்கள்.
சத்தியத்திலும், அன்பிலும் வார்த்தையை பிரசங்கியுங்கள்.
நீங்கள் பெற்ற அழைப்புக்கு தகுதியான வாழ்க்கையை வாழுங்கள்.
திருச்சபையை கட்டியெழுப்புங்கள். தொலைந்தவர்களை சென்றடையுங்கள்.
சோதனைகளில் உறுதியாக இருங்கள். மனத்தாழ்மையுடன் சேவை செய்யுங்கள்.
எல்லாவற்றிற்கும் மேலாக - உங்கள் கடவுளுடன் நெருங்கி நடங்கள்.

ஏனென்றால், உலகம் காத்திருக்கிறது,
அறுவடை ஆயத்தமாயிருக்கிறது,
கர்த்தர் உங்களுடனேகூட இருக்கிறார்.

நீங்கள் இந்த இடத்திலிருந்து புறப்படும்போது, கிறிஸ்துவின் அதிகாரத்திலும், பரிசுத்த ஆவியின் வல்லமையிலும், பிதாவின் அன்பிலும் செல்லுங்கள். தைரியமுள்ளவர்களாக இருங்கள். விசுவாசமாக இருங்கள். கனிகொடுப்பராக இருங்கள்.

இயேசுவின் நாமத்தினாலே, நாங்கள் இதை உங்களுக்கு ஆணையிடுகிறோம். ஆமென்.

2025 ஆடி 19 அன்று, கொழும்பு இறையியல் கல்லூரி தமது 15-வது பொறுப்பாணை மற்றும் நன்றி செலுத்துதலுக்கான பட்டமளிப்பு விழா ஆராதனையை நடாத்தியது. கிறிஸ்தவக்கல்வியில் சான்றிதழ், இறையியலில் பட்டச்சான்றிதழ், இளங்கலை மற்றும் பல்வேறு இறையியல்சார் பாடத்திட்டங்களில் முதுகலையை நிறைவு செய்த 165 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பதினொரு தலைப்புகளிலான புதிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன.



கொழும்பு இறையியல் கல்லூரியின் இரண்டாவது அகில இலங்கை பட்டமளிப்பு விழாவின் மும்மொழி ஆராதனை முதன்முறையாக இலங்கை தீவிலுள்ள அனைத்து 9 மாகாணங்களிலிருந்தும், அத்துடன் புலம்பெயர்ந்த இலங்கையர்களிலிருந்தும் மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இரண்டு புதிய பாடத்திட்டங்களில் தமது கல்வியை நிறைவு செய்த மாணவர்களும், 2021-ல் ஆரம்பிக்கப்பட்ட ஆலோசனைப்பணியில் முதுகலை பாடத்திட்டத்தின் முதலாவது குழுவிலிருந்து 7 மாணவர்களும் இப்பட்டமளிப்பு விழாவில் தமது பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.



சிறுவர் ஊழியக்களத்தில் கிறிஸ்தவக்கல்வி சான்றிதழ் பாடத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாவது குழுக்களுக்கு (65 மாணவர்கள்) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முழுமையாக நிகழ்நிலையில் நடாத்தப்படும் இப்பாடத்திட்டத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் கொழும்பு இறையியல் கல்லூரியின் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எரான் விக்ரமரத்ன கலந்துகொண்டார். "விசுவாசமும், ஞானமும் நிறைந்த, பகுத்தறிவினால் வழிநடத்தப்படும் வாழ்க்கை" என்ற தலைப்பில் அவரது சவாலான செய்தி அமைந்திருந்தது.





திருச்சபைக்குள்ளும், அதற்கு வெளியிலும் வியக்கத்தகு பல்வேறுபட்ட பாத்திரங்களில் பட்டம் பெற்றவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் விரிவுரையாளர்களாகவும், பராமரிப்பாளர்களாகவும், வெதுப்பகர்களாகவும், வாலிப தலைவர்களாகவும், சுவிசேஷகப்பணியாளர்களாகவும், இயக்குனர்களாகவும், ஆலோசகர்களாவும், குருவானவர்களாகவும், சிறுவர் ஊழியம் சார் ஊழியர்களாகவும், நூலகர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், ஆராதனை வழிநடத்தும் தலைவர்களாகவும், சாரதிகளாகவும், தோட்டத்துறை தொழிலாளர்களாகவும், வழிகாட்டுனர்களாகவும் மற்றும் தையல்காரர் உள்ளிட்ட பல துறைகளில் பணியாற்றுகின்றவர்களாக இருக்கின்றனர்.











## அகில இலங்கை பட்டம்பெறுநனர்களுக்கான ஞானஒடுக்கம்

### (வைகுரோ பாசறை, மாதம்பே)

நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த, அகில இலங்கையிலும் உள்ள எமது மாகாண கல்வி நிலையங்களிலிருந்தான பட்டச்சான்றிதழ், இளங்கலை, முதுகலை தரநிலைகளில் பட்டம்பெறும் மாணவர்கள் தம்மை குறித்து மீட்டிப்பார்ப்பதற்கும், ஓய்வெடுப்பதற்கும், தமது அழைப்பிற்கு மீண்டுமாக அர்ப்பணிப்பதற்காகவும் ஆனி மாதத்தில் இரு நாட்கள் ஒன்றுகூடியிருந்தனர். இந்த ஞானஒடுக்கத்திற்கு கொழும்பு இறையியல் கல்லூரியின் ஸ்தாபக தலைவரான அஜித் பெர்ணான்டோ தலைமை தாங்கினார்.
















விசேட அறிவிப்பு

## கொழும்பு இறையியல் கல்லூரிக்கும், சிக்காகோவிலுள்ள உவீட்டன் கல்லூரிக்கும் இடையேயான கல்விசார் கூட்டாண்மை

2018 முதல், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கும், உலகளாவிய திருச்சபைக்கும் சேவையாற்ற கிறிஸ்துவை மையமாக கொண்ட ஆலோசகர்களை ஆயத்தப்படுத்துவதற்கான ஒருமித்த தரிசனத்துடன், கொழும்பு இறையியல் கல்லூரியும், உவீட்டன் கல்லூரியும் இணைந்து கல்விப்பீடத்தினருக்கும், மாணவர்களுக்கும் கலாச்சாரங்களுக்கிடையேயான கற்றல் மற்றும் வளர்ச்சி சார்ந்த வாய்ப்புகளை வழங்கி வருகின்றன. இந்த வருட ஆடி மாதத்தில், இக்கூட்டாண்மையானது ஒழுங்குபடுத்தப்பட்டது. இரு கல்லூரிகளும் பரஸ்பரம் செழுமைப்படுத்திக்கொள்ளும் கல்விசார் முயற்சிகளிலும், கூட்டாண்மை வாய்ப்புகளிலும், இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்து காத்திருக்கின்றன. கொழும்பு இறையியல் கல்லூரி அதன் ஆசிய இறையியல் சங்கத்தினால் அங்கீகாரத்தினை கொண்டிருக்கிறதான ஆலோசனை பாடத்திட்டங்களானது மேலும் செழுமைப்படுத்தப்பட்டிருப்பதை குறித்து நன்றியுடையதாயிருக்கிறது.



இடமிருந்து வலமாக நிற்பவர்கள் : வண.ரவீன் கல்தேரா, கல்விப்பீடாதிபதி; முனைவர் ஐவோ பூபாலன், அதிபர்; முனைவர் டெர்ரி வாட்சன், உளவியல் பேராசிரியர், உவீட்டன் கல்லூரி, ஐக்கிய அமெரிக்கா; முனைவர். மாண்டி கல்லம்ஸ்-பராக்கா, மருத்துவ மனநல ஆலோசனைத்துறையின் இணைப்பேராசிரியர், உவீட்டன் கல்லூரி, ஐக்கிய அமெரிக்கா; திலினி ஆபிரகாம், ஆலோசனைப்பணி பாடத்திட்ட தலைவர்; முனைவர். மனோ இம்மானுவேல், கல்வி முன்னேற்றத்திற்கான தலைவர்; சிந்துஜா செல்லையா, ஆலோசனைப்பணி பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர்.

ஆலோசனைப்பணி கருத்தரங்கு

## கிருபையின் வெளியிடைகள் : கிருபை பெருகும் இடத்தில் மாற்றம் நிகழ்கிறது




ஆனி மாதத்தில் இடம்பெற்ற இந்த விசேட கருத்தரங்கில் வெவ்வேறுபட்ட திருச்சபைகளை சார்ந்த 70-ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில், "கிருபையை பிரதிபலித்தல்" (திருச்சபையில்), "கிருபையை மீட்டெடுத்தல்" (ஒரு நபராக பாதுகாப்பான வெளியிடையாக மாறுதல்) மற்றும் "கிருபையை போஷித்தல்" (கிருபை நிறைந்த இல்லத்தினை உருவாக்குதல்) ஆகிய தலைப்புகளில் ஒரு பிரதான அமர்வும், மூன்றும் பயிற்சிப்பட்டறைகளும் இடம்பெற்றன. இந்த மூன்று பயிற்சிப்பட்டறைகளும் எமது ஆலோசனைப்பணி பாடத்திட்டத்தின் எமது கல்லூரியின் முன்னாள் மாணவர்களினால் நடாத்தப்பட்டதானது ஒரு விசேட அம்சமாகும்.

## கேட் வழங்கிய கல்விப்பீடத்தினருக்கான பயிற்சி

### இறையியல் கல்வியாளர்களுக்கான உலகளாவிய சங்கம் நடாத்தும் 4 ஆண்டு கல்விப்பீடத்தினருக்கான பயிற்சித்திட்டம்

இறையியல் கல்வியாளர்களுக்கான உலகளாவிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2-ம் வருட பயிற்சியில் கொழும்பு இறையியல் கல்லூரி கல்விப்பீடத்திலிருந்து இருபது உறுப்பினர்களும் இலங்கையிலுள்ள ஏனைய நான்கு உள்நாட்டு இறையியல் கல்லூரிகள் மற்றும் வேதாகம கல்லூரிகளை சார்ந்த கல்விப்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டு பெரிதான ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொண்டனர். ஆசிய இறையியல் சங்கம் ( ATA ) வழங்கிய கல்வியை உருமாற்றுவதற்கான கற்பித்தல் முறைகள் குறித்த கல்விப்பீடத்தினருக்கான பயிற்சியில் 61 இறையியல் கல்வியாளர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சி வகுப்பினை கலாநிதி. கேரி கிரி∴பித் மற்றும் கலாநிதி. ஜோனா ∴பெலிசியானோ-சோபெரானோ ஆகியோர் வழிநடத்தினர்.




## கொழும்பு இறையியல் தலைமையகத்தின் வருகைதரு கல்விப்பீட உறுப்பினர்கள்

### "உலகளாவிய சாட்சிக்கான வேதாகம அடிப்படைகள்"

முதுகலை பாடநெறி,
ஜான் டேனியல், MTh, PhD,
SAIACS, இந்தியா



இப்பாடநெறியானது உலகளாவிய திருத்தூதுப்பணிக்கான வேதாகம அடிப்படைகளை ஆராய்ந்ததோடு, இது கடவுளிடமிருந்து தோன்றி பரிசுத்தாவியினால் வலுப்படுத்தப்படுத்தப்படுகிறது என்பதை வலியுறுத்துகிறது.

### "தம்பதியினருக்கான சிகிச்சை"

முதுகலை பாடநெறி, முனைவர். டெர்ரி வாட்சன், உளவியல் பேராசிரியர், உவீட்டன் கல்லூரி, ஐக்கிய அமெரிக்கா



ஆலோசனைப்பணியில் முதுகலையை தொடரும் மாணவர்களுக்கு தாக்கமுள்ள உறவுகளுக்கான அடிப்படை அறிவுடன் கூடிய திருமண ஆலோசனைக்கான தத்துவார்த்த அணுகுமுறைகளையும் கற்பிக்கிறது.

### "ஆலோசகர் மேற்பார்வை"

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள, உவீட்டன் கல்லூரியை சார்ந்த முனைவர். மாண்டி கல்லும்ஸ்-பராக்காவுடன் ஒரு விசேட பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.



ஆலோசனைப்பணித்துறையில் இருப்பவர்களுக்காக விசேட பயிற்சிப்பட்டறையொன்று நடாத்தப்பட்டது. ஆலோசனைப்பணி மேற்பார்வையாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு மருத்துவ மேற்பார்வையானது எவ்வாறு உதவுகிறது என்பதை இப்பயிற்சிப்பட்டறையானது ஆராய்ந்தது.

# கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீட்டுப்பிரிவு

## CTS வெளியீட்டுப்பிரிவானது 11 புதிய தலைப்புகளில் புத்தகங்களை வெளியிட்டுள்ளது

அண்மையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில், கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீட்டுப்பிரிவினால் பதினொரு புதிய தலைப்பில் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இதில், கொழும்பு இறையியல் கல்லூரி கல்விசார் பத்திரிகையின் 19-வது தொகுதியுடன் அசல் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட புத்தங்கங்களும் உள்ளடங்கும். கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீடுகள் அனைத்தும் கொஹுவலையிலுள்ள எமது கல்லூரியின் புத்தக நிலையத்திலும் முன்னணி புத்தக நிலையங்களிலும் விற்பனைக்கு கிடைக்கப்பெறுகின்றன.




வெளியீட்டுப்பிரிவினுடைய வழிகாட்டியினை பார்வையிடுவதற்கு இங்கே அழுத்தவும்

## கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விசார் பத்திரிகை




கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விசார் பத்திரிகையின் 19-வது தொகுதியில் உள்ள துறை வல்லுனர்களினால் ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகளாவன:

- ஜி.பி.வி. சோமரத்ன எழுதிய படாச்சாராவின் கதை மற்றும் யோபுவின் புத்தகம் : பௌத்த மற்றும் வேதாகம உருமாற்றத்தில் பாடுகளும் நெகிழ்வான விசுவாசமும்.
- டெட் ரூபேஷ் எழுதிய புலம்பெயர்ந்தோரின் தனித்துவங்கள் : பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் சிதறல், அடையாளம் மற்றும் மீண்டெழுதல் குறித்த அனுபவங்கள்.
- ஷாரி டி கொஸ்தா எழுதிய அப்போஸ்தலர் 21:37 - 22:2-ல் இருமொழிப்புலமையும் ஊழியத்தில் மொழித்தேர்வும்.
- ஜேக்கப் செரியன் எழுதிய பெந்தேகொஸ்தே - அருங்கொடை ஆவிக்குரியதும், சுவிசேஷப்பணி இறையியல் கல்வியின் உருவாக்கமும்
- ஐவோ பூபாலன் எழுதிய எண்மம் யுகத்தில் சாட்சி மற்றும் சீஷத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள்
- அஜித் பெர்னாண்டோ எழுதிய இலங்கையில் சுவிசேஷத்தினை அறிவித்தல் : மெதடிஸ்ட் பாரம்பரியத்திலிருந்து சில பாடங்கள்

### 2025-ம் வருட மாணவர்களினால் கொழும்பு இறையியல் கல்லூரிக்கு கிடைக்கப்பெற்ற விசேட பரிசு



கொழும்பு இறையியல் கல்லூரி தலைமையகத்தின் பட்டதாரி மாணவர்கள் ஒன்றிணைந்து கொஹுவலையிலுள்ள கல்லூரியின் நூலகத்திற்கு புத்தகங்களை இரவல் வழங்குகின்ற மற்றும் குறிப்பெடுக்கும் உசாத்துணை புத்தக பிரிவுகளுக்கு இரண்டு புதிய கணணிகளை அன்பளிப்பாக வழங்கினர்.

### பிரியாவிடை
### ரன்மலி செனவிரத்ன

கொழும்பு இறையியல் கல்லூரியில் 13 வருடங்களுக்கும் மேலாக பதிவாளராக பணியாற்றிய ரன்மலி செனவிரத்ன, ஆடி மாத இறுதியில் தனது சேவையை நிறைவேற்றிக்கொண்டார். கொழும்பு இறையியல் கல்லூரியின் வளர்ச்சியின் படியில், ரன்மலி குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியுள்ளார். அவர் வேறுபட்ட துறைகளில் கடவுளுக்கான பணியினை தொடர்ந்து செய்வதற்கு வாழ்த்துகிறோம்.

### கொழும்பு இறையியல் கல்லூரிக்கு ஜெபத்துடனான உங்களின் தொடர்ச்சியான நன்கொடைகள் மூலமாக பங்களிப்பதற்கு நீங்கள் எண்ணுகிறீர்களா?

உங்களை போன்ற தாராள மனப்பான்மை கொண்ட நண்பர்களின் ஆதரவினால் கொழும்பு இறையியல் கல்லூரியானது புதிய உயரங்களை எட்டி வருகிறது! கடவுளின் இராஜ்யத்திற்காக சிறந்த ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு உங்களுடைய நன்கொடையானது பெரிதளவிலான மாற்றத்தினை உருவாக்கும்.

**1 வங்கி பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணபரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**2 கடனட்டை மூலமாக**

**கொழும்பு இறையியல் கல்லூரியின் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்தும் வலைவாசல் மூலமாக பணத்தினை பரிமாற்றம் செய்யலாம்**

www.cts.lk என்ற எமது இணையத்தளத்திற்கு செல்லுங்கள்

முகப்பு பக்கத்தில் மேல் வலதுபுறத்தில் உள்ள கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு என்ற (Give to CTS) பொத்தானை அழுத்துங்கள்

உங்கள் நன்கொடையை செலுத்துங்கள்

**3 காசோலைகள்**

கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிட்டு** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிட்டு), அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்.**

**4 நேரடி பணக்கொடுப்பனவுகள்**

நேரடியாக கொஹுவலையிலுள்ள எமது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தரவும்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷெல் ஹேக்கல்-ரணசிங்க**
+94 77 350 2930 | rochelle@cts.lk

WWW.CTS.LK | +94 11 2890809